**No of Printed Pages: 4** **Roll No**

# SMART TEACHERS ASSOCIATION & WAY TO SUCCESS GROUPS
# SSLC MODEL PUBLIC EXAMINATION – 2021-22
## மொழிப்பாடம் I - தமிழ்

**கால அளவு : 15 நிமிடம் + 3 மணி** **மொத்த மதிப்பெண்கள் : 100**

**அறிவுரை** : (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப்பதிவாகி உள்ளதா என்று சரிபார்த்துக்கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.
(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு** : 1) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.
2) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினவாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி – I (மதிப்பெண்கள்: 15)

**i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **15 x 1 = 15**

**ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1. 'உனதருளே பார்ப்பன் அடியேனே' - யாரிடம் யார் கூறியது?
அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

2. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்
அ) உதியன்; சேரலாதன் ஆ) அதியன்; பெருஞ்சாத்தன்
இ) பேகன்; கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன்; திருமுடிக்காரி

3. <u>சிவப்புச்சட்டை</u> பேசினார். - அடிகோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை யாது?
அ) பண்புத்தொகை ஆ) அன்மொழித்தொகை இ) உவமைத்தொகை ஈ) வினைத்தொகை

4. காட்டு விலங்குகளைச் ______ தடை செய்யப்பட்டுள்ளது. செய்த தவறுகளைச் ______ திருந்த உதவுகிறது.
அ) சுட்டல், சுடுதல் ஆ) சுடுதல், சூட்டல் இ) சுடுதல், சுட்டல் ஈ) சூட்டல், சுடுதல்

5. "மருளுடையன இளமான்களே" இத்தொடர் உணர்த்தும் உட்கருத்து
அ) மான்கள் மருள்கின்றன ஆ) பெண்கள் மருள்கின்றனர்
இ) மக்கள் மருளவில்லை ஈ) இளமான்கள் மருளவில்லை

6. பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார். குலசேகர ஆழ்வார் 'வித்துவக்கோட்டம்மா' என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார் - ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே
அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி ஆ) இட வழுவமைதி, மரபு வழுவமைதி
இ) திணை வழுவமைதி, பால் வழுவமைதி ஈ) கால வழுவமைதி, இட வழுவமைதி

7. ஜெயகாந்தனின் திரைப்படமான படைப்பு
அ) பராசக்தி ஆ) மன்னாதி மன்னன்
இ) பல நேரங்களில் பல மனிதர்கள் ஈ) சில நேரங்களில் சில மனிதர்கள்

8. பயில்தொழில் - என்பதன் இலக்கணக் குறிப்பு
அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை இ) உவமைத்தொகை ஈ) அன்மொழித்தொகை

9. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் _______.
அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரைக் கவர்தல்
இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

10. எவற்றை அழித்தால் அவற்றால் வரும் துன்பமும் அழியும் என்று வள்ளுவர் கூறுகிறார்.
அ) பகை, கல்வி, கேள்வி ஆ) ஆசை, சினம், அறியாமை
இ) நட்பு, கல்வி, செல்வம் ஈ) ஆசை, பகை, போர்

11. பொருத்துக.
1. வெண்பா - i) அகவலோசை
2. ஆசிரியப்பா - ii) தூங்கலோசை
3. கலிப்பா - iii) செப்பலோசை
4. வஞ்சிப்பா - iv) துள்ளலோசை
அ) 1-iii, 2-i, 3-iv, 4-ii ஆ) 1-ii, 2-iii, 3-iv, 4-i
இ) 1-iii, 2- iv, 3-i, 4-ii ஈ) 1- iv, 2- ii, 3-iii, 4-i

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

*“வண்மை யில்லையோர் வறுமை யின்மையாற்*
*றிண்மை யில்லையோர் செறுந ரின்மையால்*
*உண்மை யில்லைபொய் யுரையி லாமையால்*
*வெண்மை யில்லைபல் கேள்வி மேவலால்.”*

12. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் _______.

அ) சிலப்பதிகாரம் ஆ) பெரியபுராணம் இ) கம்பராமாயணம் ஈ) தேம்பாவணி

13. இப்பாடலை இயற்றியவர் _______.

அ) இளங்கோவடிகள் ஆ) கம்பர் இ) சேக்கிழார் ஈ) வீரமாமுனிவர்

14. இப்பாடலில் உள்ள இயைபுத் தொடை சொற்களை எடுத்தெழுதுக.

அ) வண்மை, றிண்மை ஆ) உண்மை, வெண்மை
இ) இன்மையால், இன்மையால் ஈ) வறுமை, செறுநர்

15. ‘வண்மை’ என்ற சொல்லின் பொருளை எழுதுக.

அ) கொடை ஆ) பகைவர் இ) கல்வியறிவு ஈ) வண்ணம்

## பகுதி – II (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும். 4 x 2 = 8**
**21-வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.

(அ) நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தனர்.

(ஆ) 1956ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்தது.

17. ‘வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்
கோலொடு நின்றான் இரவு’ - என்ற குறட்பாவில்

(அ) அடிஎதுகை சொற்களை எடுத்தெழுதுக.

(ஆ) உவமஉருபு சொல்லைத் தேர்ந்து எழுதுக.

18. தரிசு, புறம்போக்கு எனும் நிலவகைகளின் பெயர்களுக்கான காரணங்களைக் கூறு?

19. வசனகவிதை - குறிப்பு வரைக.

20. அவையம் - குறிப்பு வரைக.

21. ‘வினை’ என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும். 5 x 2 = 10**

22. கலைச்சொற்கள் தருக. (அ) Humanism (ஆ) Monolingual

**குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**

கூட்டப்பெயர்களை எழுதுக. (அ) திராட்சை (ஆ) சாவி

23. நிரப்புக.

“இப்பாடலின் பொருள் என்ன?” என்று ஆசிரியர் மாணவனிடம் கேட்டது __________ வினா. அதற்கு மாணவன் ஆசிரியரிடம் ‘தெரியாது’ என்று கூறியது __________ விடை.

24. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.

(அ) உழவர்கள் மலையில் உழுதனர்.

(ஆ) முல்லைப் பூச்செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

25. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடு யாது?

26. முகிழ்த்த - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

27. பொருத்தமான இடங்களில் நிறுத்தற் குறியிடுக. **தாய் மகனிடம் கடைக்குச் சென்று வா என்று கூறினார்**

28. வெவ்வேறு பொருள் கொண்ட இருசொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக. **இரை, இறை**

## பகுதி – III (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

29. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

கொடையின் சிறப்பால் வள்ளல் எழுவர் போற்றப்படுவது, பழந்தமிழர் கொடை மாட்சியைப் புலப்படுத்துகிறது. எழுவரின் கொடைப் பெருமை சிறுபாணாற்றுப்படையிலும் பெருஞ்சித்திரனார் பாடலிலும் பதிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ஆற்றுப்படை இலக்கியங்கள், கொடை இலக்கியங்களாகவே உள்ளன. பதிற்றுப்பத்து சேர அரசர்களின் கொடைப் பதிவாகவே உள்ளது. புறநானூற்றின் கொடைப்பதிவும் குறிப்பிடத்தக்கது. அரியன என்று கருதாது, தயங்காது கொடுத்தலும் ஈதலால் வரும் இழப்புக்கு வருந்தாமையும் நாள்தோறும் கொடுத்தலும் கொடைப் பெருமைகளாகப் பேசப்படுகின்றன. வள்ளல்கள் “இல்லோர் ஒக்கல் தலைவன்”, “பசிப்பிணி மருத்துவன்” என்றெல்லாம் போற்றப்பட்டனர்.

(அ) எழுவரின் கொடைப் பெருமைப் பற்றி பதிவு செய்யப்பட்டுள்ள நூல் எது?
(ஆ) கொடைப் பெருமைகளாகப் பேசப்படுபவை எவை?
(இ) வள்ளல்கள் எவ்வாறு போற்றப்பட்டனர்?

30. தமிழக தெற்கு எல்லையை மீட்டெடுப்பதில் சிலம்புச் செல்வரின் பணிகளை தொகுத்து எழுதுக.
31. ஜெயகாந்தனின் “இன்னுமொரு முகம்” குறித்து விளக்குக.

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

**34-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32. “மாளாத காதல் நோயாளன் போல்” என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.
33. மருவூர்ப்பாக்கக் கடைத்தெருவையும், உங்கள் ஊரில் உள்ள கடைத்தெருவையும் ஒப்பிட்டு மூன்று தொடர்கள் எழுதுக.
34. அடிபிறழாமல் எழுதுக.

(அ) “அருளைப் பெருக்கி” எனத் தொடங்கும் செய்குதம்பிப் பாவலரின் பாடல். **(அல்லது)**
(ஆ) “தண்டலை மயில்க ளாடத்” என்று தொடங்கும் கம்பரின் பாடல்.

### பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

35. கீழ்வரும் பத்தியில் உள்ள தொடர் வகைகளை எடுத்து எழுதுக.

மாடியிலிருந்து ***இறங்கினார் முகமது. அவர் பாடகர்.*** பாடல்களைப் ***பாடுவதும் கேட்பதும்*** அவருக்குப் பொழுதுபோக்கு. அவரது அறையில் ***கேட்ட பாடல்களையும் கேட்காத பாடல்களையும்*** கொண்ட குறுந்தகடுகளை ***அடுக்கு அடுக்காக*** வைத்திருப்பார்.

36. தீவக அணியைச் சான்றுடன் எழுதுக.
37. “எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு” -இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.

## பகுதி – IV (மதிப்பெண்கள்: 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5 x 5 = 25**

38. **(அ) கீழ்வரும் பாடலில் உள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.**

*“கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த*
*குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த களியே*
*ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே*
*உகந்த தண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே*
*மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங் காற்றே*
*மென்காற்றில் விளைசுகமே சுகத்தில்உறும் பயனே*
*ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்*
*ஆடுகின்ற அரசேஎன் அலங்கல் அணிந் தருளே”* - வள்ளலார்.

**(அல்லது)**

(ஆ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தை ஒப்பிடுக.

39. (அ) கொரோனா பெருந்தொற்று நம்மிடம் பரவாமல் இருப்பதற்குரிய வழிமுறைகளைக் கூறி தோழனுக்கு விழிப்புணர்வு மடல் வரைக. **(அல்லது)**

(ஆ) உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்கு விண்ணப்பம் எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தைக் கவினுற எழுதுக.



41. திருச்சி மாவட்டம், உறையூர், தமிழன் நகர், தென்றல் தெருவில் 100-ஆம் இலக்க வீட்டில் குடியிருக்கும் பகலவனின் மகள் தேன்மொழி பத்தாம் வகுப்பு படிக்கின்றார். இவர் தொலைபேசி எண் : 9898989999. உறையூர் கிளை நூலகத்தில் உறுப்பினராக சேர இவர் விரும்புகிறார். காப்புத்தொகை ₹100-ம் சந்தா தொகை ₹50-ம் செலுத்த உள்ளார். தேர்வர் தம்மைத் தேன்மொழியாகக் கருதி, கொடுக்கப்பட்டுள்ள படிவத்தை நிரப்புக.

42. (அ) கோவில்களிலும் பழமையான நினைவுச் சின்னங்களிலும் கட்டியவர்கள் பெயர்களும் வரலாறும் இடம்பெற்றிருக்கும். அவை நம் பழம்பெருமையையும் வரலாற்றையும் அறியச் செய்யும் அரிய ஆவணங்கள். இவற்றைப் பராமரித்து பாதுகாக்கும் வழிமுறைகளை எழுதுக.

**(அல்லது)**

(ஆ) மொழிபெயர்க்க.

It is during our darkest moments that we must focus to see the light – Aristotle.

Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts. – Winston Churchill.

**குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்ற கருத்தை, “பொய்யாச் செந்நா”, “பொய்படுபறியா வயங்கு செந்நா” என்று இலக்கியங்கள் கூறுகின்றன. நாக்கு ஓர் அதிசய திறவுகோல் என்பார்கள். இன்பத்தின் கதவைத் திறப்பதுவும் அதுதான். மனிதனின் துன்பத்தின் கதவுகளைத் திறப்பதுவும் அதுதான். மெய் பேசும் நா மனிதனை உயர்த்துகிறது. பொய் பேசும் நா மனிதனைத் தாழ்த்துகிறது. “பழைய நன்மொழி” என்று வாய்மையை நற்றிணை குறிப்பிடுகின்றது. இதற்கு மாறாகப் ‘பொய்மொழி கொடுஞ்சொல்’ என்று பொய்யைக் குறிப்பிடுகின்றது. நிலம் புடைபெயர்ந்தாலும் பொய் சொல்லக்கூடாது என்பது பல இலக்கியங்களில் வற்புறுத்தப்பட்டுள்ளது.

*(i)* வாய்மையை நற்றிணை எவ்வாறு குறிப்பிடுகின்றது?

*(ii)* ‘வாய்மை பேசும் நாவே உண்மையான நா’ என்ற கருத்தை இலக்கியங்கள் எவ்விதம் கூறுகின்றன?

*(iii)* மனிதனைத் தாழ்த்துவது எது?

*(iv)* நிலம் புடைபெயர்ந்தாலும் செய்யக்கூடாதது எது?

*(v)* நாக்கு எதனால் அதிசய திறவுகோலாகிறது?

## பகுதி – V (மதிப்பெண்கள்: 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** **3 x 8 = 24**

43. (அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் விவரிக்க.

**(அல்லது)**

(ஆ) சங்க இலக்கியங்களில் காணப்படும் ஐந்து அறக்கருத்துகளைத் தொகுத்து, அவை இன்றும் தேவையே என்பதை நிறுவுக.

44. (அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும், அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் ‘கோபல்லபுரத்து மக்கள்’ கதைப்பகுதி கொண்டு விவரி.

**(அல்லது)**

(ஆ) ‘மங்கையராய்ப் பிறப்பதற்கே’ என்ற துணைப்பாடத்தின் வாயிலாக முன்னேற்றம் அடைந்த சிலரின் வாழ்வியல் நிகழ்வுகளை எழுதுக.

45. **(அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

முன்னுரை – தமிழகம் தந்த தவப்புதல்வர் – நாட்டுப்பற்று – மொழிப்பற்று – பொதுவாழ்வில் தூய்மை – எளிமை – மக்கள் பணியே மகத்தான பணி – முடிவுரை.

**(அல்லது)**

**(ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

முன்னுரை – உழவுத்தொழில் – உழவர் – உழவுத்தொழிலின் இன்றியமையாமை – உழவர்களை மதித்தல் – உணவினை வீணாக்காமல் உண்ணுதல் – முடிவுரை.

# வெற்றிக்கு வழி குழுமம் & திறன்வளர் ஆசிரியர் மன்றம்
## 10ஆம் வகுப்பு மாதிரி பொதுத்தேர்வுக்கான விடைக்குறிப்பு 2021-22
## தமிழ்

### பகுதி - I

1. (ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
2. (ஆ) அதியன்; பெருஞ்சாத்தன்
3. (ஆ) அன்மொழித்தொகை
4. (இ) சுடுதல், சுட்டல்
5. (இ) மக்கள் மருளவில்லை
6. (இ) திணை வழுவமைதி, பால் வழுவமைதி
7. (ஈ) சில நேரங்களில் சில மனிதர்கள்
8. (அ) வினைத்தொகை
9. (இ) வலிமையை நிலைநாட்டல்
10. (ஆ) ஆசை, சினம், அறியாமை
11. (அ) 1-iii, 2-i, 3-iv, 4-ii
12. (இ) கம்பராமாயணம்
13. (ஆ) கம்பர்
14. (இ) இன்மையால், இன்மையால்
15. (அ) கொடை

### பகுதி - II

#### பிரிவு – 1

16. அ) நெய்தல் நிலத்தவர் பாணர்களை எவ்வாறு வரவேற்றனர்?
    ஆ) கன்னியாகுமரி மாவட்டம் எப்போது தமிழ்நாட்டுடன் இணைந்தது?
17. அ) வேலொடு, கோலொடு
    ஆ) போலும் **(இயல் - 3, செய்யுள் - திருக்குள்)**
18. புத்தக பக்க எண்: **8 (இயல் - 1, உரைநடை)**
19. புத்தக பக்க எண்: **43 (இயல் - 2, செய்யுள்)**
20. புத்தக பக்க எண்: **198 (இயல் - 8, உரைநடை)**
21. புத்தக பக்க எண்: **155 (இயல் - 6, செய்யுள்)**

#### பிரிவு – 2

22. அ) மனிதநேயம் **(புத்தக பக்க எண்: 229)**
    ஆ) ஒரு மொழி **(புத்தக பக்க எண்: 24)**
    **மாற்று வினா** : கூட்டப் பெயர்கள்
    அ) திராட்சை ***குலை*** ஆ) சாவி ***கொத்து***
23. "இப்பாடலின் பொருள் என்ன?" என்று ஆசிரியர் மாணவனிடம் கேட்டது ***அறி***வினா. அதற்கு மாணவன் ஆசிரியரிடம் 'தெரியாது' என்று கூறியது ***மறை*** விடை.
24. புத்தக பக்க எண்: **148 (இயல் - 6)**
25. **வேறுபாடு :**

| **தொழிற்பெயர்** | **வினையாலணையும் பெயர்** |
|---|---|
| வினை, பெயர்த் தன்மையாகி வினையையே உணர்த்தி நிற்கும். | தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிக்கும். |
| காலம் காட்டாது | காலம் காட்டும். |
| படர்க்கைக்கே உரியது | மூவிடத்திற்கும் உரியது. |
| **எ.கா:** பாடுதல், படித்தல் | **எ.கா:**பாடியவள், படித்தவர். |

26. முகிழ்த்த = முகிழ் + த் + த் + அ
    முகிழ் - பகுதி
    த் - சந்தி
    த் - இறந்த கால இடைநிலை
    அ - பெயரெச்ச விகுதி
27. தாய் மகனிடம், "கடைக்குச் சென்று வா" என்று கூறினார்.
28. ***இறை***வனிடம் ***இரை*** வேண்டின புறாக்கள்.

### பகுதி - III

#### பிரிவு – 1

29. அ) சிறுபாணாற்றுப்படை
    ஆ) அரியன என்று கருதாது, தயங்காது கொடுத்தலும் ஈதலால் வரும் இழப்புக்கு வருந்தாமையும் நாள்தோறும் கொடுத்தலும் கொடைப் பெருமைகளாகப் பேசப்படுகின்றன.
    இ) "இல்லோர் ஒக்கல் தலைவன்", "பசிப்பிணி மருத்துவன்" என்றெல்லாம் போற்றப்பட்டனர்.
30. புத்தக பக்க எண்: **163 & 164 (இயல் - 7, உரைநடை)**
31. புத்தக பக்க எண்: **207 (இயல் - 9, உரைநடை)**

#### பிரிவு – 2

32. புத்தக பக்க எண்: **94 (இயல் - 4, செய்யுள்)**
33. **வணிக வீதி :** மருவூர்ப்பாக்கத்தில் கடைத்தெருக்களில் நடைபெற்ற வணிகங்கள் காற்றோட்டமான சூழலில் நடைபெற்றன. ஆனால் எங்கள் ஊரில் உள்ள வணிக வளாகங்கள் வானுயர் கட்டிடங்களாக பெருவளர்ச்சி அடைந்துள்ளன.
    **நெசவாளர் வீதி :** நெசவாளர் வீதியில் நெசவாளர்கள் பட்டிலும், முடியிலும், பருத்தி நூலிலும் நுணுக்கமாக நெய்தனர். எங்கள் ஊரில் இயந்திரங்களின் மூலம் நெய்யப்படும் துணிகள் பெரிய வணிக வளாகங்களில் விற்பனை செய்யப்படுகின்றன.
    **கூல வீதி :** எட்டுவகைத் தானியங்களும் குவிந்து கிடக்கும் கூலக்கடைத் தெருக்கள் இருந்தன. எங்கள் ஊரில் தானியங்கள் உற்பத்தி குறைந்ததால் குறைந்த வகையிலான தானியங்களே விற்பனை செய்யப்படுகின்றன.
34. புத்தக பக்க எண்: **106 (இயல் - 5, செய்யுள்)**

**அ)** அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று.

**(அல்லது)- கா.ப. செய்குதம்பிப் பாவலர்**

**ஆ)** புத்தக பக்க எண்: **136 (இயல் - 6, செய்யுள்)**

தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கண் முழவி னேங்கக் குவளை கண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ.

**-கம்பர்**

### பிரிவு – 3

35. **(இயல் - 3, இலக்கணம்)**

இறங்கினார் முகமது - வினைமுற்றுத்தொடர்
அவர் பாடகர் - எழுவாய்த்தொடர்
பாடுவதும் கேட்பதும் - இடைச்சொல் தொடர்
கேட்ட பாடல் - பெயரெச்சத் தொடர்
கொண்ட குறுந்தகடு - பெயரெச்சத் தொடர்
கேட்காத பாடல் - எதிர்மறை பெயரெச்சத் தொடர்
அடுக்கு அடுக்காக - அடுக்குத்தொடர்

36. **தீவக அணி :**

**அணி இலக்கணம் :** செய்யுளின் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் அச்செய்யுளின் பல இடங்களிலுள்ள சொற்களோடு சென்று பொருந்திப் பொருளை விளக்குவதால் இவ்வணி தீவக அணி எனப்படுகிறது.

**சான்று :**

*“சேந்தன வேந்தன் திருநெடுங்கண், தெவ்வேந்தர்*
*ஏந்து தடந்தோள், இழிகுருதி - பாய்ந்து*
*திசைஅனைத்தும், வீரச் சிலைபொழிந்த அம்பும்*
*மிசை அனைத்தும் புள்குலமும் வீழ்ந்து.”*

**பாடலின் பொருள் :** அரசனுடைய கண்கள் கோபத்தால் சிவந்தன. அதே அளவில் பகைமன்னர்களின் தோள்கள் சிவந்தன; குருதி பாய்ந்து திசைகள் சிவந்தன; வலிய வில்லால் எறியப்பட்ட அம்புகள் சிவந்தன; குருதி மேலே வீழ்தலால் பறவைக் கூட்டங்கள் யாவும் சிவந்தன.

**அணிப் பொருத்தம் :**

*வேந்தன் கண் சேந்தன*
*தெவ்வேந்தர் தோள் சேந்தன*
*குருதி பாய்ந்து திசை அனைத்தும் சேந்தன*
*அம்பும் சேந்தன*
*புள் குலம் வீழ்ந்து*
*மிசைஅனைத்தும் சேந்தன*

இவ்வாறாக முதலில் நிற்கும் சேர்ந்தன(சிவந்தன) என்ற சொல் பாடலில் வருகின்ற கண்கள், தோள்கள், திசைகள், அம்புகள், பறவைகள் ஆகிய அனைத்தோடும் பொருந்திப் பொருள் தருவதால் தீவக அணி எனப்படுகிறது.

37. **இயல் - 8 (இலக்கணம்)**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| எப் / பொருள் | நேர் நிரை | கூவிளம் |
| எத் / தன் /மைத் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| தா/ யினும் | நேர் நிரை | கூவிளம் |
| அப் / பொருள் | நேர் நிரை | கூவிளம் |
| மெய்ப் / பொருள் | நேர் நிரை | கூவிளம் |
| காண் / ப | நேர் நேர் | தேமா |
| தறி / வு | நிரைபு (நேர்) | பிறப்பு |

### பகுதி – IV

38. அ) புத்தக பக்க எண்: **200 (இயல் - 8) நயம் பாராட்டுக.**
**(மையக்கருத்து - திரண்ட கருத்து - சொல் நயம் - தொடைநயம் - மோனை நயம், எதுகை நயம், இயைபு நயம் - பா வகை - சந்த நயம் - அணி நயம்)**
ஆ) புத்தக பக்க எண்: **20 (இயல் - 1, செய்யுள்)**

39. அ) சுயமாக தயாரித்துக் கொள்க. **(மடல் தயாரித்தல்)**
ஆ) புத்தக பக்க எண்: **199 (இயல் - 8) கடிதம் எழுதுக.**

40. புத்தக பக்க எண்: **97 (இயல் - 4) மொழியோடு விளையாடு**

41. புத்தக பக்க எண்: **124 (இயல் - 5) படிவம்**
(வினாவிற்கு ஏற்ப சுயமாக தயாரித்துக் கொள்க)

42. அ) புத்தக பக்க எண்: **182 (இயல் - 7) நிற்க அதற்குத் தக.**
**(அல்லது)**
ஆ) புத்தக பக்க எண்: **225 (இயல் - 9) மொழிபெயர்க்க.**

மாற்று வினா : (இயல் - 8)

***i)*** ‘பிழையா நன்மொழி’ என்று வாய்மையை நற்றிணை குறிப்பிடுகின்றது.

***ii)*** வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்ற கருத்தை, “பொய்யாச் செந்நா” “பொய்படுபறியா வயங்கு செந்நா” என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

***iii)*** பொய்பேசும் நா மனிதனைத் தாழ்த்துகிறது.

***iv)*** நிலம் புடைபெயர்ந்தாலும் பொய் சொல்லக்கூடாது.

***v)*** இன்பத்தின் கதவைத் திறப்பதுவும், துன்பத்தின் கதவைத் திறப்பதும் மனிதன் நாக்கினால் பேசும் உண்மையால் தான். எனவே நாக்கு ‘ஓர் அதிசயத் திறவுகோல்’ ஆகும்.

### பகுதி - V

43. அ) புத்தக பக்க எண்: **20 (இயல் - 1) உரைநடை**
**(சொல் வளம் - சொல்லக்கத்திற்கான தேவை)**
**(அல்லது)**
ஆ) புத்தக பக்க எண்: **198 (இயல் - 8) உரைநடை**
**(வணிக அறம் - அரசியல் அறம் - போர் அறம் - கொடை அறம் - உதவியில் அறம் - வாய்மை அறம்)**

44. அ) புத்தக பக்க எண்: **66 (இயல் - 3) துணைப்பாடம்**
**(அன்னமய்யாவும் வழிப்போக்கனும் - வாலிபனின் வேண்டுகோளும், அன்னமய்யாவின் உதவியும் - விருந்தோம்பல் - அன்னமய்யாவின் மனநிறைவு - அன்னமய்யா எனும் பெயர் பொருத்தம்)**
**(அல்லது)**
ஆ) வெற்றிக்கு வழி பக்க எண்: **328 (முழுமைக்கையேடு)**
♣ **எம்.எஸ். சுப்புலட்சுமி** ♣ **பாலசரஸ்வதி**
♣ **இராஜம் கிருஷ்ணன்** ♣ **சின்னப்பிள்ளை**
♣ **கிருஷ்ணாம்மாள் ஜெகந்நாதன்**
**(சாதனையாளர்களின் இளமைக்காலம் - சமூக பணிகள் - சாதனைகள் - விருதுகள் - படைப்புகள்)**

45. அ) வெற்றிக்கு வழி பக்க எண்: **429 (முழுமைக்கையேடு)**
**(அல்லது)**
ஆ) வெற்றிக்கு வழி பக்க எண்: **430 (முழுமைக்கையேடு)**